Under Section 173 BNSS

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165176

1. District : Tiruppur மாவட்டம் PS: V&AC காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: 3/2025/AC/TPR மு.த.அ. எண் Date: நாள் 07-04-2025

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7(a) & (b)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை On 27-03-2025 at 11.00hrs at AE West Office, Avinashi
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை On 01-04-2025 at 12.00hrs at AE West Office, Avinashi
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07-04-2025 Time : நேரம் 07.15hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 07-04-2025 G.D. vol. II Time : நேரம் 07.15hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் At about 44km North West
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o AE West, TNPDCL, Avinashi, Tiruppur
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Rasappan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் B. Ramannagounder
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 59/2025 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Agriculture (g) Address : முகவரி Door No. 6/263, Karaiyapalayam, Muthuvayakadu Thottam, Sembiyanallur Post, Avinashi Taluk, Tiruppur.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Mohankumar, Foreman, TNPDCL, Avinashi West Office, Tiruppur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS....................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R.நாகப்பன் 7-4-2025 | [signature] 07.04.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 07.04.2025 09.00 hrs

Name: பெயர் K. Sasilekha
Rank: நிலை Inspector of Police ........ No. எண் ........
V&AC, Tiruppur.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 3/2025/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 07.04.2025-ம் தேதி காலை 07.15 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது திரு.R.ராசப்பன், த/பெ.B.ராமண்ணகவுண்டர், கதவு எண்.6/263, கரையபாளையம், முத்துவயகாடு தோட்டம், செம்பியநல்லூர், போஸ்ட், அவிநாசி தாலூகா, திருப்பூர் என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர் அலுவலகத்தில் ஆஜராகி கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புனர் திரு.R.ராசப்பன், த/பெ.B.ராமண்ணகவுண்டர், கதவு எண்.6/263, கரையபாளையம், முத்துவயகாடு தோட்டம், செம்பியநல்லூர், போஸ்ட், அவிநாசி தாலூகா, திருப்பூர் பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, திருப்பூர். நான் திருப்பூர் மாவட்டம், அவிநாசி தாலுகா, செம்பியநல்லூர் போஸ்ட், முத்துவயகாடு தோட்டம், கரையபாளையத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். திருப்பூர் மாவட்டம், அவிநாசி தாலுகா, நம்பியாம்பாளையம் கிராமம், க.ச.எண்.367/4-ல் 1.30 ஏக்கர் விவசாயநிலம் எனது பெயரில் உள்ளது. அந்த நிலத்தில் போர்வெல் உள்ளது. அந்த விவசாய நிலத்தில் தட்கல் திட்டத்தில் 5 H.P. விவசாய மோட்டார் பம்ப் செட்டிற்கு மின் இணைப்பு வாங்க முடிவு செய்து எனது பெயரில் 2021 வருடம் அவிநாசி-மங்கலம் ரோட்டில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவிநாசி AD அலுவலகத்தில் விண்ணப்பம் கொடுத்தேன். அந்த விண்ணப்பத்துடன் நிலத்திற்கான பத்திரம், பட்டா, அடங்கல், நிலவரைபடம், F.M.B, விவசாய நிலத்தில் போர்வெல் இருப்பதற்கு VAO சான்று, நிலஉரிமை சான்று ஆகியவற்றை இணைத்திருந்தேன். 5 H.P.தட்கல் மின் இணைப்புக்கான கட்டணம் ரூ.2,50,000/-க்கு வங்கியில் டிடி எடுத்து அவிநாசி மேற்கு AE அலுவலகத்தில் பில் கட்டுமிடத்தில் கொடுத்தேன். அதற்கு அவர்கள் பணம் கட்டிய ரசீது கொடுத்தார்கள். அதன்பிறகு நான் AE அலுவலகம் சென்று அங்கிருந்த AE அவர்களை சந்தித்து தட்கல்

விண்ணப்பம் சம்பந்தமாக கேட்ட போது அவர் தட்கல் மின் இணைப்பு வழங்குவதற்கு நிலத்தில் மின்வழிப்பாதை உள்ளதா என்பதை பார்ப்பதற்கு இடத்தை பார்க்க வருவதாக சொன்னார். சுமார் ஒரு மாதம் கழித்து AE அவர்கள் இடத்தை பார்த்துவிட்டு சீனியாரிட்டி படிதான் உங்கள் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்படும் என்று சொன்னார். நான் தட்கல் மின் இணைப்புபெற விண்ணப்பம் செய்த விபரத்தை தெரிந்துகொண்ட எனது நிலத்திற்கு பக்கத்து தோட்டத்தில் உள்ளவர்கள் தோட்டத்திற்கு செல்லும் வழிதடத்தில் மின் கம்பம் அமைக்க ஆட்சேபனை தெரிவித்தார்கள். அதனால் நான் வழிதடம் பிரச்சனை முடிந்த பின்னர் பார்க்கலாம் என இருந்து விட்டேன். இந்நிலையில் கடந்த வருடம் தீபாவளி பண்டிகைக்கு முன்னர் அவிநாசி மேற்கு AE அவர்கள் எனது செல்போனுக்கு தொடர்புகொண்டு உங்களது விண்ணப்பம் சீனியாரிட்டி அடிப்படையில் எஸ்டிமேட் தயார் செய்ய வந்துள்ளது. அதனால் உங்களது நிலத்தை பார்வையிட வேண்டும் என்று சொன்னார். நான் அன்றைக்கே அவரைஅழைத்து சென்று நிலத்தை காண்பித்தேன். அப்போது அவருடன் ஒருவர் வந்திருந்தார். அவரும் இடத்தை பார்த்துவிட்டு சென்றார். பின்னர் மின்கம்பம் அமைக்க ஆட்சேபனை தெரிவித்த பக்கத்து தோட்டத்துகாரரிடம் பேசியபோது அவர் ஆட்சேபனை இல்லை என எழுதி கொடுத்ததை AE அலுவலகத்தில் கொடுத்தேன். பின்னர் 22.03.2025 தேதி சனிக்கிழமை காலை 9384271345 என்ற செல்போனிலிருந்து எனது செல்போன் 9790386913-க்கு பேசிய நபர் தான் அவிநாசி மேற்கு ஈபி அலுவலகத்திலிருந்து போர்மேன் மோகன்குமார் பேசுவதாகவும் உங்கள் தட்கல் மின் இணைப்புக்கு கம்பம் போட வந்துள்ளதாகவும் திங்கட்கிழமை வந்து பார்க்குமாறு சொன்னார். நான் 24.03.2025 திங்கட்கிழமை காலை சுமார் 11.00 மணிக்கு ஈபி அலுவலகம் சென்று போர்மேனை பார்க்க சென்றபோது அவர் அலுவலகத்தில் இல்லை. நான் அவருக்கு போன் செய்து கட்டபோது மீட்டிங்கிற்கு சென்றுள்ளதாகவும் உங்களுக்கு இந்தவாரத்தில் கம்பம் போட்டுவிடுவோம் என்றும் அடுத்த நாள் வந்து பாருங்கள் என்று சொன்னார். நான் 25.03.2025 தேதி காலை சுமார் 11.00 மணிக்கு ஈபி அலுவலகம் சென்று போர்மேன் திரு.மோகன்குமார் அவர்களை பார்த்த போது கம்பம் எடுக்க சென்றுள்ளார்கள், இன்றைக்கே வேலை ஆரம்பிக்கிறேன் என்று சொன்னார். அதன்பிறகு 25.03.2025 மற்றும் 26.03.2025 ஆகிய தேதிகளில் 12 மின்கம்பங்கள் போட்டு கொடுத்தனர். 26.03.2025 தேதி மதியம் போர்மேன் மோகன்குமார் அவர்கள் எனது செல்போனுக்கு தொடர்பு கொண்டு மின்கம்பங்கள் போட்டுவிட்டேன், அலுவலகம் வந்து பாருங்கள் என்று சொன்னார். அதற்கு நான் வெளியே இருக்கிறேன்

என்றும் இன்றைக்கு வரமுடியாது நாளை வந்து பார்ப்பதாக சொன்னேன். அதற்கு அவர் சரி என்றும் வரும்போது எல்டிபார்ம், பாண்ட் மற்றும் மோட்டார் பில் கொண்டுவந்து கொடுக்கசொன்னார். நான் 27.03.2025 தேதி வியாழக்கிழமை காலை சுமார் 10.30 மணியளவில் AE அலுவலகம் சென்று போர்மேன் மோகன்குமார் அவர்களை பார்த்து எல்டிபார்ம், பாண்ட் மற்றும் மோட்டார் பில் ஆகியவற்றை கொடுத்தேன். அவர் அதை வாங்கி பார்த்து விட்டு உங்களுக்கு அடுத்தவாரம் மீட்டர் பொருத்தி மின் இணைப்பு கொடுத்து விடுவோம் என்றும் இந்த வேலையெல்லாம் உங்களுக்கு சீக்கிரமாக செய்து கொடுத்துள்ளேன் எனவே தனக்கு தனியாக ரூ.6000/- கொடுங்கள் என்று கேட்டார். நான் இந்த தட்கல் சர்வீசுக்கு கஷ்டப்பட்டு தான் பணம் கட்டியுள்ளேன். என்னால் அவ்வளவு பணம் தரமுடியாது என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் 01.04.2025 தேதி செவ்வாய்கிழமை மதியம் சுமார் 12.00 மணியளவில் AE அலுவலகம் சென்று போர்மேன் மோகன்குமார் அவர்களை பார்த்துசர்வீஸ் கனெக்சன் பற்றி கேட்டேன். அதற்கு அவர் மின் கம்பங்கள் அமைத்து கொடுத்ததற்கு தான் கேட்ட தொகையை இன்னும் நீங்கள் தரவில்லை என்றும் தான் கேட்ட தொகை ரூ.6,000/- கொடுத்தால் நாளைக்கே மீட்டர் மாட்டி கனெக்சன் கொடுத்து விடுகிறேன் என்றும் வரும்போது எனக்கு போன் செய்துவிட்டு வாருங்கள் என்று சொன்னார். எனக்கு உடல் நிலை சரியில்லாததால் போக முடிய வில்லை. எனக்கு பணம் ரூ.6,000/- லஞ்சமாக அவிநாசி மேற்கு அலுவலகத்தில் பணிபுரியும் போர்மேன் மோகன்குமார் அவர்களுக்கு கொடுக்க விருப்பமில்லை. எனவே எனது பெயரில் உள்ள விவசாய நிலத்தில் தட்கல் திட்டத்தில் 5 H.P. விவசாய மோட்டார் பம்ப் செட்டிற்கு மின் கம்பங்கள் அமைத்து கொடுத்து வேலை செய்ததற்கும், மின் மீட்டர் பொருத்தி மின் இணைப்பு வழங்க ரூ.6,000/- லஞ்சம் கேட்கும் போர்மேன் திரு.மோகன்குமார் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். Sd/-xxxx R.ராசப்பன், 7-4-2025. Sir, Received the complaint on 07.04.2025 at 07.15 hrs and made preliminary verification between 07.15 hrs and 07.45 hrs after getting approval from DVAC, Chennai and registered a case in Tiruppur V&AC Cr.No.3/2025/AC/TPR u/s 7(a) & (b) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 07.04.2025 between 07.45 hrs to 08.45 hrs. Sd/- xxxx (K.Sasilekha). 07/04/2025 Inspr. V&AC, TPR.

Original FIR along with original complaint of Tr.R.Rasappan, S/o.B.Ramannagounder, Door.No.6/263, Karayapalayam, Muthuvayak kadu, Sempiyanallur Post, Avinashi Taluk, Tiruppur is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur. 07.04.2025